## கழக இளைஞர் அணி தேர்ந்தெடுத்த ‘என் உயிரினும் மேலான...’

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் இளம் பேச்சாளர்கள் உரை வீச்சு!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் – நிகழ்ச்சிக்கு திடீரென வருகை தந்து உரைகளைக் கேட்டு ரசித்தார்!

சென்னை, நவ.10-

**கழக இளைஞர் அணி சார்பில் ‘என் உயிரினும் மேலான...’ எனும் தலைப்பில் பேச்சுப் போட்டியில் தேர்வானவர்களின் உரை முழக்கம் அனைவரையும் வெகுவாக கவர்ந்து வருகிறது. அந்த வகையில் நேற்று முன்தினம் சென்னை கிழக்கு மாவட்டத்தில் இளம் பேச்சாளர்கள் உரையாற்றிய நிகழ்ச்சிக்கு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திடீர் வருகை தந்து பேச்சாளர்களின் உரையை கேட்டு ரசித்தார்.**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத்தின் இளைஞரணியின் சார்பில் கழகத்துக்காக 100 பேச்சாளர்களைத் தேர்வு செய்யும் வகையில் “என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் மாநில அளவிலான பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. கழக இளைஞரணியுடன் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியும் இணைந்து இந்தப் போட்டியை ஒருங்கிணைந்து நடத்தியது. 17 ஆயிரம் போட்டியாளர்கள் 78 நடுவர்கள் மாவட்ட அளவில் தேர்வானவர்களுக்கு மண்டல வாரியாகப் போட்டிகள் என்று மிகப் பிரமாண்டமாக நடத்தப்பட்ட இப்போட்டியில் 182 பேச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற மூன்று பேச்சாளர்களுக்கு கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.10.2024 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற விழாவில் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

“என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டியில் தேர்வு செய்யப்பட்ட 182 பேச்சாளர்களை கழகத்தினர் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றும், மாநில முழுவதும் அப்பேச்சாளர்களை கொண்டு கழகத்தின் சாதனைகள் குறித்து மக்களிடம் விளக்கிடும் வண்ணம் நிகழ்ச்சிகள் நடத்திட வேண்டும் என்றும் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தி இருந்தார்.

அதன்படி, சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நேற்று முன்தினம் (8.11.2024) கொளத்தூர், ஜி.கே.எம்.காலனி, அரிச்சந்திரா மைதானத்தில், கழகத்தின் வரலாறு மற்றும் சாதனைகள், கழக ஆட்சியில் மக்களின் நல்வாழ்விற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றை பற்றி எடுத்துரைக்கும் வகையில், திராவிடர் கழகத்தின் துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி அவர்கள் விழாப் பேருரையாற்றிட “என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டியில் தேர்வு செய்யப்பட்ட இளம் பேச்சாளர்களான கோகுல் மற்றும் செல்வி.இராஜராஜேஸ்வரி ஆகியோரது எழுச்சி உரையுடன் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.









**கழகத் தலைவரும் – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.11.2024) சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கொளத்தூர், ஜி.கே.எம்.காலனி, அரிச்சந்திரா மைதானத்தில், கழகத்தின் வரலாறு மற்றும் சாதனைகள், கழக ஆட்சியில் மக்களின் நல்வாழ்விற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றை பற்றி எடுத்துரைக்கும் வகையில், திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி விழாப் பேருரையாற்றிட “என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டியில் தேர்வு செய்யப்பட்ட இளம் பேச்சாளர்களின் எழுச்சி உரை நிகழ்ச்சிக்கு நேரில் வருகை தந்து, இளம் பேச்சாளர்களின் உரைகளைக் கேட்டு ரசித்தார். இந்த நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.இராசா, இரா.கிரிராஜன், கலாநிதி வீராசாமி. சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் ப. ரங்கநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.**

### முதல்வரின் திடீர் வருகை!

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கொளத்தூர் தொகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு திடீரென்று நேரில் வருகை தந்து, இளம் பேச்சாளர்களின் உரைகளை கேட்டு ரசித்தார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொண்ட பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள், செயல்படுத்திய திட்டங்கள், மக்களுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை பற்றி விளக்கும் “நம்ம கொளத்தூர், நம்ம முதல்வர்” என்ற புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டார்.

இந்த நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.இராசா, கிரிராஜன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---



வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதிக்குட்பட்ட பொதுமக்களுடன் நடந்த முதல்வர் திட்டமுகாம்களில் பெறப்பட்ட மனுக்களின்படி 798 பயனாளிகளுக்குரூ.10.91 கோடியிலான நலத்திட்டங்களை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, வருவாய் அலுவலர் த.மாலதி,வேலூர் மாநகராட்சி துணை மேயர் எம். சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் எஸ்.சரவணன், ஒன்றிய கழக செயலாளர் கருணாகரன், தாசில்தார் ஜெகன், கழக பேச்சாளர் பிரம்மபுரம்பழனி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுத் திட்டத்தின் கீழ் 233ஆவது ஆய்வை அரக்கோணம் தொகுதியில் மேற்கொண்டார். அரக்கோணம் பெருமூச்சி பகுதியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு மாணவர்களின் திறமைகளைப் பாராட்டி, ஆசிரியப் பெருமக்களுக்கு அமைச்சர் வாழ்த்துகள் தெரிவித்தார்.

---

## மதுரை மாவட்டக் கழகம் சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

### விமான நிலையத்தில் அமைச்சர் பி.மூர்த்தி – மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி – மு.மணிமாறன் தலைமையில் கழகத்தினர் திரண்டனர்!

மதுரை, நவ. 10-

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை விமான நிலையத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் முன்னிலையில் மதுரை மாவட்ட திமுக சார்பில் கழகத்தினர் இரு வண்ணக் கொடி ஏந்தி உற்சாகம் மிகுந்த வரவேற்பு கொடுத்தார்கள், அதன் விபரம்:-


கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்டங்கள் முழுவதும் அரசின் நலத்திட்டங்கள் செயல்பாடுகள் குறித்து ஆய்வுப் பணி மேற்கொள்வதாக அறிவித்து முதற்கட்டமாக கோவை மாவட்டத்தில் துவங்கினார்.

அடுத்ததாக விருதுநகர் மாவட்டத்தில் இரண்டு நாட்கள் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ள திட்டமிட்டு சென்னையிலிருந்து விமான மூலம் மதுரை விமான நிலையம் வந்தடைந்தார். அவ்வாறு வந்த கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாவட்ட திமுக சார்பில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தினர் இரு வண்ணக் கொடி மற்றும் வரவேற்பு பதாகைகளுடன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க, கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்க, இளந்தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்க என விண்ணை முட்டும் கோஷங்கள் எழுப்பியவாறு உற்சாகம் மிகுந்த வரவேற்பு கொடுத்தார்கள்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மதுரை மாநகர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றார்கள்.

---

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஜார்கண்ட் மாநில முதல்வர் சிபு சோரனின் தனிச் செயலாளர் வீடு உள்ளிட்ட 9 இடங்களில், வருமானவரித் துறையினர் சோதனை நடத்தி இருக்கிறார்களே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; அந்த மாநில சட்டப் பேரவைக்கான தேர்தல் அடுத்த வாரம் தொடங்குகிறது. வருமானவரித் துறை சோதனை எதற்காக என்பது ஜார்கண்ட் மாநில வாக்காளர்களுக்குப் புரியாதா என்ன ? வருமானவரித் துறை, ஒன்றிய பா.ஜ.க.வின் கூட்டணியில் சேர்ந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டனவே ! இம்மாதிரி சலசலப்புக்கெல்லாம் சிபுசோரனும், அவரது கட்சியும் கொஞ்சமும் அஞ்சாது !**